

நெல்லை மாவட்டம் இராதாபுரத்தில் சுதந்திர போராட்ட தியாகி அழகுமுத்துக்கோன் 267வது பிறந்தநாள் முன்னிட்டு இராதாபுரம் பெருந் தலைவர் காமராஜர் பேருந்து நிலையம் முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த சுதந்திரப் போராட்ட தியாகி அழகுமுத்துக் கோன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.உடன் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெகதீஸ், மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் நம்பி, ஊராட்சி மன்றம் கூட்டமைப்பு தலைவர் அனிதா பிரின்ஸ், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர், ஒன்றிய குழு உறுப்பினர் பரிமளம், ஊராட்சி மன்ற தலைவர்கள் பொன்.மீனாட்சி அரவிந்தன், முருகேசன் உள்பட பலர் உள்ளனர்.



திருவண்ணாமலையில் சுதந்திரப் போராட்ட வீரர், மாவீரன் அழகுமுத்துக் கோன் 267வது குரு பூஜை விழாவை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவ அணித் துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் உள்ளிட்ட நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன், விஜி (எ) சு.விஜியராஜ், கு.கணேஷ் உட்பட பலர் உள்ளனர்.

### கள்ளக்குறிச்சி விவகாரத்தில் பிரதான எதிர்க்கட்சியின்

# உரை எதுவும் சட்டமன்றத்தில் பதிவாகவில்லை என்பது வருத்தம் அளிக்கிறது!

### சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு – புதுக்கோட்டையில் பேட்டி!



புதுக்கோட்டை, ஜூலை 12-

தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் ரகுபதியின் இல்ல திருமண விழா கடந்த 7ம் தேதி நடைபெற்ற நிலையில் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்க முடியாததால் மணமக்களை சந்திக்க வந்த தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு புதுக்கோட்டை ரோஜா இல்லம் என்ற விருந்தினர் மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில்:-

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் எல்லா வழிபாட்டுத் தலங்களிலும் அவரவர்கள் இஷ்டப்படி செல்கிறார்கள், அது போன்று பாதுகாப்பு உள்ள மாநிலம் தமிழ்நாடு, இந்தியாவிலேயே பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு தான் என்று கூறி உலக அளவில் செஸ் ஒலிம்பியாட் மாமல்லபுரத்தில் தான் நடைபெற்றது, இந்தியாவில் 14வது தொழில் துறையில் இருந்த மாநிலம் இரண்டாவது இடத்திற்கு வந்துள்ளது.

உலக முதலீட்டாளர்கள் எந்த மாநிலத்தில் தொழில் முதலீடு செய்யலாம் என்று சொன்னால் அதற்கு சட்டம் ஒழுங்கு பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு என்று கூறி அதிகப்படியானோர் வந்து கொண்டு உள்ளனர் அது அனைவருக்கும் தெரியும், இதற்குப் பிறகு சட்டம் ஒழுங்கு பாதிப்பு என்று கூறினால் என்ன சொல்வது என்று தெரியவில்லை.

அனைவருக்கும் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய மாநிலம் தான் தமிழ்நாடு. தனிப்பட்ட முறையில் நடக்கும் பிரச்சினைகளுக்கு இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுகிறது. சட்டமன்றத்தில் கடந்தாண்டு எவ்வளவு சம்பவங்கள் நடைபெற்றது இந்த ஆண்டு எவ்வளவு சம்பவங்கள் நடைபெற்றுள்ளது என்ற புள்ளி விவரங்களோடு எடுத்துரைக்கப்பட்டது.

ஒரு அரசின் மீது குற்றச்சாட்டு எப்போது சொல்ல வேண்டும் என்றால் ஒரு குற்ற சம்பவம் நடைபெற்று நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தான் சொல்ல வேண்டும். ஆனால் இந்த அரசு சம்பவம் நடைபெற்ற அடுத்த நிமிடமே நடவடிக்கை எடுத்து யாராக இருந்தாலும் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து சரியான நடவடிக்கை எடுத்து நீதிமன்றம் முன்பு நிறுத்துகிறார்கள்.

காவல்துறை அவர்களால் முடிந்தவற்றை செய்து வருகின்றனர். நாமும் அவர்களுக்கு ஒத்துழைப்பு முடிந்த அளவு கொடுக்க வேண்டும். பல இடங்களில் ஒத்துழைப்பு குறையும் போது வழக்கை கண்டுபிடிப்பதில் தாமதம் ஏற்படுகிறது. இன்று பத்திரிகையாளர்கள் பாதுகாப்பாக உள்ளனர் நாம் அனைவரும் பாதுகாப்பாக இருக்கிறோம். நானும் பாதுகாப்பாக தான் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திலிருந்து வருகிறேன். இதற்கு மேல் என்ன பாதுகாப்பு வேண்டும். தனிப்பட்ட முறையில் நடைபெறும் சம்பவங்களை நாம் பெரிது படுத்தக் கூடாது.

எதிர்க்கட்சியினர் சட்டமன்றத்தில் அமர்ந்து பேச வேண்டும். கள்ளக்குறிச்சி விவகாரம் என்று கூறுகின்றனர் பிரதான எதிர்க்கட்சியின் பேச்சு ஒன்று கூட சட்டமன்றத்தில் பதிவாகவில்லை என்பது வருத்தம் அளிக்கிறது.

சட்டமன்றம் என்றால் அதற்கு ஒரு விதிமுறை உள்ளது. இந்திய அரசியல் சட்டப்படி பேரவை விதிப்படி இதுதான் சட்டமன்றம் கூடும். காலையில் கேள்வி நேரம் கேள்வி நேரத்திற்கு முன்பாகவே வெளியே செல்ல வேண்டும் என்று தகராறு செய்தால் நாம் என்ன செய்ய முடியும்.

ஜனநாயகத்தின் நான்காவது தூண் சரியாக இருந்தால் அனைத்தும் சரியாக இருக்கும். நடக்கும் குற்ற சம்பவங்களை காவல்துறையினரிடம் ஊடகத்துறையினர் கொண்டு சென்று சேர்த்தால் சரியாக நடக்கும். நான்காவது தூண் சரியாக இருந்தால் நாடே சரியாக இருக்கும். அதற்காக நான் நீங்கள் சரியாக இல்லை என்று கூறவில்லை என்று சட்டப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு தெரிவித்தார்.

### மு.மதிவாணன் – இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ.– மோகன் பங்கேற்பு!

# மலைக்கோட்டையில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா தெருமுனைக் கூட்டம்!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – தமிழன் பிரசன்னா சிறப்புரை!

திருச்சி, ஜூலை 12-

திருச்சி தெற்கு மாவட்டம் மாநகர மலைக்கோட்டை பகுதி 13,13அ, சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு தெருமுனை கூட்டம் வடக்கு ஆண்டார் வீதியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மலைக்கோட்டை பகுதி கழகச் செயலாளர் மோகன் வரவேற்புரை ஆற்றினார்.

வட்ட கழகச் செயலாளர் சங்கர், சரவணசெல்வன் தலைமை தாங்கினர். இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்கள் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக செய்தி தொடர்பாளர் இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, மாநகரகழக செயலாளரும் மண்டல தலைவருமான மு.மதிவாணன், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினர். மாமன்ற உறுப்பினர் மணிமேகலை நன்றியுரை ஆற்றினார்.

மேலும் இந்த தெருமுனை கூட்டத்தில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் பேசியதாவது-

கலைஞருடைய நூற்றாண்டை முன்னிட்டு 100 நிகழ்ச்சிகள் அதில் 36வது தெருமுனைக் கூட்டமாக 100 நிகழ்ச்சியை கடந்த நாங்கள் சென்று விட்டோம் என்று சொன்னாலும் அதில் 36 ஆவது தெருமுனைக் கூட்டமாக நிறைவு தெருமுனை கூட்டமாக நான் கலந்து கொள்கின்ற முதல் தெருமுனைக் கூட்டமாக இந்த கூட்டம் அமைந்திருக்கின்றது என்று சொன்னால் அது வருகை தந்திருக்கின்ற பிரசன்னா ஒரு காரணம்.

இன்றைக்கு நாங்கள் எல்லாம் மேடை போட்டு பேசுகின்றோம் சட்டமன்றத்திலே பேசுகிறோம் என்று சொன்னால் எங்களுக்கெல்லாம் முன்னோடியாக நாங்கள் ஒரு சிலரை பார்த்து இதுபோல் நாமும் பேச வேண்டும் என்று எண்ணுகின்ற நபர்களில் ஒரு நபராக இருக்கக் கூடியவர் நம்முடைய அன்பு சகோதரர் தமிழன் பிரசன்னா என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆக அப்படிப்பட்ட பிரசன்னா அவர்கள் இங்கே வருகை தந்து இன்றைக்கு உரையாற்றி இருக்கக் கூடிய ஒரு நல்ல தம்பி அவர்கள், அதேபோன்று தான் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் பேருலே இனிமையை வைத்துக் கொண்டிருக்கின்ற இனிப்பு இனிகோ இருதயராஜ் அவர்கள், இப்படி நல்லவர்கள் மேடையில் இருக்கும் போது மழை வராமல் வேறு என்னதான் வரும். ஆக அப்படிப்பட்ட நம்முடைய கூட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற மாநகரக் கழகத்தினுடைய செயலாளர் ன் மதிவாணன் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

கலைஞர் அவர்கள் இன்றும் நம்மை வழி நடத்துகிறார் என்பதற்காக தான் 2016 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கை என்று வந்த பொழுது இந்த புதிய கல்விக் கொள்கையை நாம் ஏன் எதிர்க்க வேண்டும் என்று அவர் போட்ட அந்த விதைதான் இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் நம்முடைய மாநிலத்திற்கு என்று தனியாக ஒரு கல்விக் கொள்கையை ஒரு தனிநபர் ஆணையத்தின் மூலமாக இன்னைக்கு அந்த ஆவணத்தையும் இன்னைக்கு ஒரு பெற்றிருக்கின்றார். அது மட்டுமல்ல நுழைவுத் தேர்வு என்பதை இருக்கக்கூடாது என்பதை ஒழித்துக் கட்டியவர் கலைஞர்.

2006 ஆம் ஆண்டு அவர் கொண்டு வந்த காரணத்தால்தான் நம்முடைய பிள்ளைகள் எல்லாம் 12 ஆம் வகுப்பு பிள்ளைகள் எல்லாம் மருத்துவப் படிப்பாக இருந்தாலும் பொறியியல் கல்லூரி சேர்வதாக தான் அதுக்கு போதுமானது என்று சொன்னவர் கலைஞர் அவர்கள்.

அதனால் தான் இன்றைக்கு நீட் மாதிரி நுழைவுத் தேர்வு தமிழ்நாட்டு முதலமைச்ச ராக இருந்தாலும் நமது சட்டமாக இருந்தாலும் இந்திய குற்றவியல் நடைமுறை சட்டமாக இருந்தாலும், இந்திய சாட்சிகள் சட்டமாக இருந்தாலும் சரி இதெல்லாம் மாத்துறாங்க. யாரு ஒன்றியத்துல இன்னைக்கு கூட்டணி ஆட்சி நடத்திட்டு இருக்காங்களே அவங்க மாத்துறாங்க. என்னமோ பேர்லாம் வைக்கிறாங்க. பாரதியார் நியாய சங்கீதாவா பாரதிய நாகரிக சுரக்ஷனா சங்கீதாவா பாரதிய சாட்சிகள் சட்டம் என்று இப்படி சாட்சிய சட்டம் அப்படின்னு நமக்கெல்லாம் புரியாத பெயரில் சட்டங்கள்.

மொழி திணிப்பு என்று வரும்போது அன்றைக்கும் இன்றைக்கும் முத்தமிழ் கலைஞர் தான் நம்ம வழிநடத்திக் கொண்டிருக்கின்றார்.

மொழி திணிப்பை என்றைக்கும் எதிர்ப்போம். அது இந்தியாக இருந்தாலும் சரி எந்த மொழியாக இருந்தாலும் சரி, அதை செய்து கொண்டிருக்கின்றோம் என்று சொன்னால் இன்றைக்கு நாம் குரல் கொடுக்கின்றோம்.

நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அதற்கென்று ஒரு தனி நபர் ஆணையத்தை ஏற்படுத்தி இருக்கிறார் என்று சொன்னால் இன்றைக்கும் நம்மை வழி நடத்திக் கொண்டிருப்பவர் கலைஞர் அவர்கள் தான்.

அதற்காகத்தான் அவருக்கு நாம் நன்றி தெரிவிக்க வேண்டும் என்று தெற்கு மாவட்டத்தின் சார்பாக 100 நிகழ்ச்சிகளை கடந்து அவருக்கு 101 வது பிறந்தநாளே வந்துருச்சு. ஆனால் நிறைவு விழா கூட்டத்தை நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் இடையில் வந்த தேர்தலையொட்டி முன்கூட்டி இதெல்லாம் தள்ளி வைத்திருந்தது காரணமாகத்தான் ஆக அந்த விதத்தில் வருகை தந்திருக்கின்ற தாய்மார்கள் உங்களுக்கெல்லாம் இந்த நேரத்தை இந்தக் கூட்டத்தை பயன்படுத்திக்கொண்டு ஒட்டுமொத்த இந்தியாவிலேயே புதுச்சேரியும் சேர்த்து 40க்கு 40 ஒரு மாநிலம் வென்று இருக்கிறது ஒரு தலைவர் வென்று காட்டி இருக்கிறார் என்று சொன்னார்.

அந்த வெற்றியை தந்த என்னுடைய தாய்மார்கள் உங்கள் அனைவருக்கும் இந்த இடத்தில் இருந்து எங்களுடைய நன்றிகளை உங்கள் பாதத்தில் சமர்ப்பிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இங்கே இனிகோ அண்ணன் சொன்னது மாதிரி தான் வருகின்ற 2026 தேர்தலில் நம்முடைய தலைவர் சொல்லியிருக்கிறார் 234 தொகுதியில் 200 தொகுதிகளாவது குறைந்தபட்ச வெல்ல வேண்டும் என்று சொல்லி இருக்கிறார் ஏன் அதிலும் நூற்றுக்கு நூறு 234 தொகுதிகளிலும் வென்று காட்டுவோம் நம்முடைய தலைவருடைய கரத்தை வலுப்படுத்துவோம் உங்களோடு நாங்கள் இருக்கின்றோம் எங்களோடு நீங்கள் இருக்கிறீர்கள்.

யார் வந்தாலும் ஒரு கை பார்ப்போம். நீங்கள் இருக்கின்றபோது எங்களுக்கு என்ன கவலை என்று சொல்லி வருகை தந்திருக்கின்ற உங்கள் அனைவருக்கும் நல்ல நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கின்றதை அனைத்துக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசினார்.

### திருவான்மியூர், பாம்பன் சுவாமிகள் திருக்கோயில், பெரியபாளையம்

### பவானியம்மன் திருக்கோயில், ஆலங்குடி, குருபகவான் திருக்கோயில் உள்ளிட்ட

# 65 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு!

### இந்து சமய அறநிலையத்துறை அறிவிப்பு!


சென்னை, ஜூலை12-

இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகைக் குட்பட்ட சென்னை, திருவான்மியூர், பாம்பன் சுவாமிகள் திருக்கோயில், திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயில், திருவாரூர் மாவட்டம், ஆலங்குடி, ஆபத்சகாயேஸ்வரர் (குரு ஸ்தலம்) திருக்கோயில் உள்ளிட்ட 65 திருக்கோயில் களுக்கு இன்று (12.07.2024) வெகு விமரிசையாக குடமுழுக்கு நடைபெறவுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப் பேற்றபின், இந்து சமய அறநிலையத்துறையில் திருப்பணிகள், குடமுழுக்கு, திருத்தேர் மற்றும் திருக்குளங்கள் புனரமைப்பு, திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் போன்ற பணிகள் செம்மையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 07.05.2021 முதல் 11.07.2024 வரை 1,856 திருக்கோயில்களுக்கு குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளன. 9,141 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள மாநில அளவிலான வல்லுநர் குழுவால் அனுமதி வழங்கப்பட்டு திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

குடமுழுக்கு நடைபெற்று 66 ஆண்டுகளும், பாலாலயம் செய்யப்பட்டு 36 ஆண்டுகளும் கடந்த நிலையில் பல்வேறு சட்டப்போராட்டங்களை நடத்தி, ரூ.1.12 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சென்னை, திருவான்மியூர், பாம்பன் சுவாமிகள் திருக்கோயில், ரூ.170.11 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவு திட்டத்தின்கீழ் பணிகள் நடைபெற்று வரும் திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயில், ரூ. 1.52 கோடி மதிப்பீட்டில் திருவாரூர் மாவட்டம், ஆலங்குடி, ஆபத்சகாயேஸ்வரர் (குரு ஸ்தலம்) திருக்கோயில், சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் குடமுழுக்கு நடைபெற்ற திருச்சி மாவட்டம், பூர்த்தி கோவில் திருமுக்தீஸ்வரர் திருக்கோயில் உள்ளிட்ட 65 திருக்கோயில் களுக்கு குடமுழுக்கு இன்று (12.07.2024) வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

குடமுழுக்கு நடைபெறும்திருக்கோயில்களில் சென்னை, சேத்துப்பட்டு, கருகாத்தம்மன் திருக்கோயில், சேலம் மாவட்டம், கிருஷ்ணா நகர், சீதா ராமச்சந்திர மூர்த்தி திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, நாட்டுச் சாலை, அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில், புதுக்கோட்டை மாவட்டம், திருமயம், மொனசந்தை, கரியமாணிக்கப் பெருமாள் திருக்கோயில், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி, ஞாயிறு, புஷ்பரதீஸ்வரர் திருக்கோயில், கன்னியாகுமரி மாவட்ட தேவஸ்தான கட்டுப்பாட்டிலுள்ள 7 திருக்கோயில் கள், புதுக்கோட்டை மாவட்டம், திருமயம், முத்து மாரியம்மன் திருக்கோயில், இராணிப்பேட்டை மாவட்டம், சேந்தமங்கலம், சுந்தர விநாயகர் திருக்கோயில், ஆகிய திருக்கோயில்களும் அடங்கும். இதற்கான பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களும், திருக்கோயில் பணியாளர்களும் மேற்கொண்டு வருகின்றனர்.



மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் 267 வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம் பட்டினம் காத்தானில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் கார்மேகம், ராமநாதபுரம் ஒன்றிய பெருந்தலைவர் கே. டி .பிரபாகரன், ஒன்றிய கவுன்சிலர் கவிதா கதிரேசன், உட்பட கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## ஈரோட்டில் நல உதவிகள் வழங்கல்!

ஈரோடு, ஜூலை 12

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101-வது பிறந்த நாளையொட்டி ஈரோடு தெற்கு மாவட்ட கழக வர்த்தகர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் கே.எம்.ராஜசேகர், ஏற்பாட்டில் முத்துகவுண்டன் பாளையம் மரிய நிவாஸ் முதியோர் இல்லத்தில் உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இநத நிகழ்வில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் பொதுக்குழு உறுப்பினர் ஆர்.பொன்னுசாமி, மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ஆர்.பி.பாலு, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ஜாகிர் உசேன், சின்னியம்பாளையம் செல்வகுமார், மாமன்ற உறுப்பினர் தண்டபாணி, மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் ஆர்.வெங்கடேஸ்வரன், மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகள் கே.முத்து சாமி, ஜி.பாலுசாமி, மெஸ் பாலு, தேவேந்திரன், மணல் முருகேஷ், வினோத் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.





சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்கு பகுதி, 48–வது வட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் – நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கு.ரமேஷ், இரா.பாலன் ஏற்பாட்டில் மாவட்ட பொறுப்பாளர், சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் தலைமையில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் ஆர்.மூர்த்தி, வ.பெ.சுரேஷ், விஜயலட்சுமி விஜயகுமார் எம்.சி. முன்னிலையில் சிறப்புரையாற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. வழங்கினர். தா.இளைய அருணா, ந.மனோகரன், எஸ்.ரமேஷ், ரெயின்போ என்.விஜயகுமார், எம்.கே.இஸ்மாயில், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், இரா.பொன்முடி, எஸ்.யுவராஜ், ந.குமார், கோ.நித்யானந்தம், ந.மணிமாறன், என்.யாத் பாஷா, எஸ்.தங்கவாசுகி, என்.சிவகுமார், பி.பாலாஜி, டபிள்யு.எஸ். ரவிச்சந்திரன், சி.சின்னராஜ், பாபா, ஜி.சீனிவாசன், கே.குணசேகரன் மற்றும் கழகத் தோழர்கள் இதில் கலந்து கொண்டனர்.